# வேலூர் புரட்சி – கி.பி.1806

## 8th Social Science Questions in Tamil - Old Book

1. கி.பி.1801 ஆம் ஆண்டு தோன்றிய தென்னிந்திய புரட்சியானது கீழ்க்கண்ட எந்த புரட்சிக்கு வழி வகுத்தது.

**A) வேலூர் புரட்சி**

B) பெருங்கிளர்ச்சி

C) முதல் இந்திய சுதந்திரப் போர்

D) கர்நாடகப் போர்கள்

**விளக்கம்: கி.பி.1801 ஆம் ஆண்டு தோன்றிய தென்னிந்தியப் புரட்சி முடிவுற்றாலும், அப்புரட்சி ஏற்படுத்திய அதிர்ச்சி மக்கள் மனதில் இருந்து அழியவில்லை.**

2. வேலூர் புரட்சியின் போது சென்னை மகானத்தின் ஆளுநராக இருந்தவர்______________ஆவார்.

A) கானிங் பிரபு

B) மின்டோ பிரபு

**C) பென்டிங் பிரபு**

D) கர்சன் பிரபு

3. கீழ்க்கண்டக் கூற்றுகளை கவனி:

கூற்று 1: வேலூர் புரட்சியின் போது தலைமை ராணுவத் தளபதியாக இருந்தவர் கர்னல் கில்லஸ்பி ஆவார்.

கூற்று 2: இவர் அறிமுகப்படுத்திய ராணுவச் சீர்த்திருங்கள் வேலூர்ப் புரட்சிக்கு வித்திட்டது.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: வேலூர் புரட்சியின் போது வில்லியம் பெண்டிங் பிரபு சென்னை மாகாணத்தின் ஆளுநராகவும், ஜான் கிராடக் தலைமை ராணுவத் தளபதியாகவும் இருந்தனர். ஜான் கிராடக் அறிமுகப்படுத்திய ராணுவச் சீர்திருத்தங்கள் வேலூர்ப் புரட்சிக்கு வித்திட்டது.**

4. திப்புசுல்தானின் உறவினர்கள் அவரது மரணத்திற்கு பிறகு____________கோட்டையில் சிறைபடுத்தப்பட்டனர்.

A) கடலூர் கோட்டை

B) கல்கத்தா கோட்டை

**C) வேலூர் கோட்டை**

D) திண்டுக்கள் கோட்டை

**விளக்கம்: திப்புசுல்தானின் மரணத்திற்குப் பிறகு வேலூர்க் கோட்டையில் சிறைபடுத்தப்பட்டனர்.**

5. வேலூர் சிப்பாய் புரட்சி நடைபெற்ற ஆண்டு__________ஆகும்.

**A) 1806**

B) 1801

C) 1808

D) 1809

6. வேலூர் புரட்சிக்கு மூலக்காரணமாக இருந்த சிப்பாய்கள்__________வழி வந்தவர்கள் ஆவர்.

A) நாயக்கர்கள்

B) காகதியர்கள்

**C) பாளையக்காரர்கள்**

D) இராஷ்டிரகூடர்கள்

**விளக்கம்: வேலூர் புரட்சிக்கு மூலக்காரணமாக விளங்கிய சிப்பாய்கள், பாளையக்காரர்களின் வழி வந்தவர்கள் ஆவர்.**

7. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானதைக் கண்டறி:

கூற்று 1: வேலூர் புரட்சியானது திப்புசுல்தானின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டது.

கூற்று 2: இப்புரட்சிக்கு மூலக்காரணமாக விளங்கிய சிப்பாய்கள் தமிழ் மற்றும் மலையாள மொழி பேசும் பகுதியைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

A) கூற்று 1 மட்டும் தவறு

**B) கூற்று 2 மட்டும் தவறு**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: இப்புரட்சிக்கு மூலக்காரணமாக விளங்கிய சிப்பாய்கள் தமிழ் மற்றும் கன்னட மொழி பேசும் பகுதியைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.**

7. வேலூர் புரட்சிக்கான காரணங்களுல் சரியானதைக் கண்டறி:

1. புதிய கருவிகள் மற்றும் சிப்பாய்களின் உடைகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள்.

2. இந்துச் சிப்பாய்களின் காதணிகள், நெற்றியில் சமயக் குறிகள் இடுதல் போன்றவற்றிற்குத் தடை விதிக்கப்பட்டது.

3. முஸ்லீம்கள் தங்களுடைய தாடி, மீசைகளைக் குறிப்பிட்ட அளவுதான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

A) 1 மட்டும் சரி

B) 1 3 மட்டும் சரி

C) 1 2 மட்டும் சரி

**D) அனைத்தும் சரி**

8. புதிய வகை தலைப்பாகையை அறிமுகப்படுத்திய இராணுவத் தளபதி__________ஆவார்.

A) கில்லஸ்பி

B) ஜான் கிராட்டக்

**C) அக்னியூ**

D) பான் கோர்ட்

**விளக்கம்: தளபதி அக்னியூ என்பவரால் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய வகை தலைப்பாகை இந்து முஸ்லீம்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் சிப்பாய்கள் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக வெளிப்படையாக கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.**

9. கிழக்கிந்திய கம்பெனியால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வகை தலைப்பாகையை அணிய மறுத்த சிப்பாய்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை___________ஆகும்.

A) 500 முதல் 900 வரை சாட்டையடி

B) பதிவி விலக்கம்

**C) A மற்றும் B இரண்டும்**

D) மரண தண்டனை

**விளக்கம்: புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தலைப்பாகையை அணிய மறுத்த சிப்பாய்களுக்கு 500 முதல் 900 சாட்டையடி தண்டனையாக விதிக்கப்பட்டது பதவியிலிருந்தும் விலக்கப்பட்டனர்.**

10. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபட வேண்டும் என்ற இரகசியத்திட்டத்தைத் தீட்டியவர்____________ஆவார்.

A) திப்புவின் மைத்துனர்

B) திப்புவின் அமைச்சர்

**C) திப்புவின் மைந்தர்**

D) திப்புவின் படைத்தளபதி

11. கீழ்க்கண்டவற்றுள் தவறானதைக் கண்டறி:

1. திப்புவின் மகளின் திருமண நிகழ்ச்சி ஜீன் 9, 1806 ஆம் ஆண்டு வேலூர்க் கோட்டையில் நடைபெற்றது.

2. திருமண நிகழ்ச்சியின் போது ஜீன் 10 ஆம் நாள் அதிகாலை இந்திய சிப்பாய்கள் திடீரென ஆங்கில அதிகாரிகளையும், ஆங்கில சிப்பாய்களையும் தாக்கி, வேலூர்க் கோட்டையைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

3. அன்று அதிகாலையில் திப்புவின் கொடி கோட்டையில் ஏற்றப்பட்டு, திப்புவின் மகன் அரசராக அறிவிக்கப்பட்டார்.

A) 1 3 மட்டும் சரி

B) 1 2 மட்டும் சரி

C) அனைத்தும் சரி

**D) அனைத்தும் தவறு**

**விளக்கம்: திப்புவின் மகளின் திருமண நிகழ்ச்சி ஜீலை 9, 1806 ஆம் ஆண்டு வேலூர்க் கோட்டையில் நடைபெற்றது. திருமண நிகழ்ச்சியில் சிப்பாய்கள் அனைவரும் கலந்து கொண்டனர். திருமண நிகழ்ச்சியின் போது ஜீலை 10 ஆம் நாள் அதிகாலை இந்திய சிப்பாய்கள் திடீரென ஆங்கில அதிகாரிகளையும், ஆங்கில சிப்பாய்களையும் தாக்கி, வேலூர்க் கோட்டையைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். அன்று அதிகாலையில் திப்புவின் கொடி கோட்டையில் ஏற்றப்பட்டு, திப்புவின் மகன் அரசராக அறிவிக்கப்பட்டார்.**

12. கி.பி. 1806 ஆம் ஆண்டு வேலூர் கோட்டையில் கிளர்ச்சி நடைபெற்ற போது கோட்டையின் வெளியில் இருந்த ஆங்கிலத் தளபதி____________ஆவார்.

A) ஜான் கிராட்டாக்

B) பான் கோர்ட்

C) கில்லஸ்பி

**D) கூட்ஸ்**

**விளக்கம்: வேலூர்க் கோட்டையின் வெளியில் இருந்த ஆங்கிலத் தளபதி கூட்ஸ், வேலூர் கோட்டை கைப்பற்றப்பட்ட செய்தியை உடனடியாக ஆற்காட்டில் இருந்த இராணுவ முகாமிற்குத் தெரிவித்தார்.**

13. வேலூர் கோட்டையை மீண்டும் கைப்பற்றிய இராணுவத் தளபதி___________ஆவார்.

A) பான் கோர்ட்

B) ஜான் கிராட்டாக்

C) கூட்ஸ்

**D) கில்லஸ்பி**

**விளக்கம்: வேலூர்க் கோட்டையின் வெளியில் இருந்த ஆங்கிலத் தளபதி கூட்ஸ், வேலூர் கோட்டை கைப்பற்றப்பட்ட செய்தியை உடனடியாக ஆற்காட்டில் இருந்த இராணுவ முகாமிற்குத் தெரிவித்தார். படைத் தளபதி கில்லஸ்பி தலைமையில் ஆற்காட்டிலிருந்து இராணுவம் உடனடியாக வேலூருக்கு விரைந்தது. வேலூர் கோட்டை மீண்டும் ஆங்கிலேயரால் மீட்கப்பட்டு ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் வந்தது.**

14. வேலூர் புரட்சி தோல்வியில் முடிந்ததற்கான காரணங்களுல் பொருந்தாததைக் கண்டறி:

1. புரட்சியை நடத்த முறையான தலைமை கிடையாது.

2. திப்புவின் பிள்ளைகளுக்குப் போதுமான போர்ப் பயிர்சி கிடையாது.

3. திப்புவின் பிள்ளைகள் தங்கள் வாழ்வின் பெரும்பதியைத் தங்களது அரண்மனையில் கழித்தனர்.

4. இராணுவ வீரர்களுக்கு இந்திய அரசர்களிடமிருந்து ஆதரவு மற்றும் உதவிகளைப் பெற முடியவில்லை.

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

**C) 3 மட்டும் தவறு**

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: திப்புவின் பிள்ளைகள் தங்கள் வாழ்வின் பெரும்பதியைத் சிறையில் கழித்தனர்.**

15. வேலூர் புரட்சிக்கு பிறகு திப்புவின் குடும்பத்தினர்____________ற்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

A) புதுச்சேரி

B) கடலூர்

**C) கல்கத்தா**

D) ரங்கூன்

**விளக்கம்: வேலூர் புரட்சி தோல்வியில் முடிவடைந்தது. இருப்பினும் பிற்காலத்தில் இது பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியது. திப்புவின் குடும்பத்தினர் கல்கத்தாவிற்கு அழைத்துச்செல்லப்பட்டு ஆறு வருடங்களுக்கு மேலாக அங்குச் சிறையில் அடைக்கப்பட்டனர்.**

16. 1857 ஆம் ஆண்டு நடைபெற்ற சிப்பாய் புரட்சிக்கு முன்னோடியாக அமைந்த புரட்சி___________ஆகும்.

A) தென்னிந்திய புரட்சி

**B) வேலூர் புரட்சி**

C) கர்நாடகப் போர்கள்

D) மைசூர் போர்கள்

17. பொருத்துக:

| | | |
|---|---|---|
| A) திப்புவின் மகன் | – | 1. தலைப்பாகை |
| B) அக்னியூ | – | 2. கிளர்ச்சியாளர்கள் |
| C) சிப்பாய்கள் | – | 3. பெண்டிங் |
| D) சென்னை ஆளுநர் | – | 4. பதேக்ஹைதர் |

| | | | | |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| **D)** | **4** | **1** | **2** | **3** |

**விளக்கம்:**

| | | |
|---|---|---|
| **A) திப்புவின் மகன்** | **–** | **1. பதேக்ஹைதர்** |
| **B) அக்னியூ** | **–** | **2. தலைப்பாகை** |
| **C) சிப்பாய்கள்** | **–** | **3. கிளர்ச்சியாளர்கள்** |
| **D) சென்னை ஆளுநர்** | **–** | **4. பெண்டிங்** |